DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.1, SRIVAIKUNTAM

| | | |
|---|---|---|
| Case number | : | CC 156 of 2014 |
| Deposition of witness | : | PW - 7 |
| Name | : | மாரியப்பன் |
| Father Name | : | பெருமாள் |
| Age | : | 59 |

**A1, A4 died. A2 present. A3 absent.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 20.07.2026.

**முதல் விசாரணை**

1. நான் தற்போது ரயில்வே போலீசில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் உள்ளேன். நான் இதற்கு முன்பாக சேரகுளம் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியாற்றிய சமயத்தில், கடந்த 08.10.2013 ஆம் தேதி மாலை சுமார் 04.00 மணியளவில் நான் நிலைய பொறுப்பில் இருந்தபோது, ஸ்ரீவைகுண்டம் காவல் நிலையத்திலிருந்து போன் மூலம் காயத்தகவல் இன்டிமேசன் பெறப்பட்டது. அதன் அடிப்படையில் மேல் அதிகாரிகளின் உத்தரவு பெற்று ஸ்ரீவைகுண்டம் அரசு மருத்துவமனைக்கு சென்று அங்கு சிகிச்சையில் இருந்த இசக்கிமுத்து என்பவரை விசாரித்து சம்பவம் பற்றி அறிந்து அவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். பின்னர் 21.15 மணியளவில் நிலையம் திரும்பி குற்றத்தின் தன்மைக்கு ஏற்ப குற்ற எண் 27/2013 IPC பிரிவுகள் 294(b), 323, 324, 506(2) ஆக வழக்கு பதிவு செய்தேன் . **மேற்படி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் வழக்கு கோப்பினை மேல் விசாரணைக்காக

சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.மைக்கேல்ராஜ் அவர்கள் பார்வைக்கு வைத்தேன். அவர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

இராமானுஜம்புதூரில் இருந்து ஸ்ரீவைகுண்டம் அரசு மருத்துவமனைக்கு வர வேண்டும் என்றால் சேரக்குளம் காவல் நிலையத்தை தாண்டி தான் வர வேண்டும் என்று சொன்னால் சரிதான். சம்பவம் நடந்தவுடன் நேரடியாக எந்த ஒரு புகாரும் எங்கள் காவல் நிலையத்தில் பெறப்படவில்லை என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கின் புகார்தாரரும் மற்ற சாட்சிகளும் எதிரிகளை தாக்கியதாக எதிர் வழக்கு உள்ளது என்று சொன்னால் சரிதான். அதன் குற்ற எண் 28/2013 என்றால் சரிதான். உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்ற வாசகமானது புகார் வாக்குமூலத்தில் இடைச் செருகலாக உள்ளது என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும் புகார்தாருக்கும் இடையே கோவில் கொடை விழா சம்பந்தமாக இரு பிரிவுகளாக இருந்து வருகிறார்கள் என்று சொன்னால் அந்த விவரம் எனக்கு தெரியாது. சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் முதல் தகவல் அறிக்கை தயார் செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரிகள் மீது பொய் வழக்கு புனையப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

B DHARANEETHER

Digitally signed by B DHARANEETHER
Date: 2026.07.20 17:34:35 +0530

நீதித்துறை நடுவர் எண் 1, ஸ்ரீவைகுண்டம்